

# வழக்கறிஞர் வரதராஜா

பொன் குலேந்திரன் (கனடா)

அறிஞர் சி.என் அண்ணாத்துரையைப் போல் வழக்கறிஞர் வாமதேவன் பேச்சுவன்மையுள்ளவர். அவருக்கு வயது முப்பது இருக்கும். இளமை ததும்பும் அவரது தோற்றமும், பார்வையும் , கேள்விகளை ஊடுறுவிக் கேட்கும் விதமும், எதிர்கட்சிக்காரரை கிடுகிடுக்க வைத்துவிடும். கறுத்த கோட், வெள்ளை நிறக் காற்சட்டை சேர்ட், கறுப்பபு நிற டையுடனும், மிடுக்கு நடையோடும் உதவியாளர்கள் இருவர் பைல்களை தூக்கிக் கொண்டு புடைசூழ, கோர்ட்டுக்கு அவர் நடந்து போகும் போது “அதோ வருகிறார் வரதன் , இனி எதிர்கட்சியாளரைத் தேவன் தான் காப்பாற்ற வேண்டும்;” என்று இரட்டைக் கருத்துப்படப் பேசுவோரும் உண்டு

ஆனால் மூன்றெழுத்து தேவனுக்கு அண்ணாவை போல் அடுக்கு மொழிபேச வராது, ஏன் என்றால் மற்றைய அரசியல்வாதிகள் போல் அவருக்கு அரசியலில் ஈடுபடும் சிந்தனை இருக்கவில்லை. சட்டத்தில் உள்ள ஓட்டைகளை நன்கு அறிந்தவர். அதனால் தான் எந்த ஒரு கடினமான கொல,. கற்பழிபப்பு ,. கொள்ளை போன்ற குற்றவியல் வழக்கை வாதாடி தன் குறுக்கு விசாரணை செய்யும் திறமையால்

உண்மையை பொய்யாக்கி வென்றுவிடுவார். பல குற்றவாளிகளை மரணதண்டனை , ஆயுள் தண்டனையில் இருந்து காப்பாற்றி இருக்கிறார் . " சட்டம் ஓட்டைகள் நிறைந்த ஒரு அறை. அந்த அறையில் உள்ள ஓட்டைகளுக்குள் புகுந்து விளையாடிவிட்டேன் " என்பார் வழக்கறிஞர் வரதராஜா நகைச் சுவையாக.

***

வழக்கறிஞர் வரதராஜா ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. சட்டத்தின் மேல் உள்ள பற்றினால் சட்டம் படித்து வழக்கறிஞரானார். சில கொலைகாரர்களை மரணதண்டனையில் இருந்து காப்பற்றி இருக்கிறார் . அதிகம் பேசமாட்டார். அவரது வாடிக்கையாளர்கள் ஏதாவது கேள்விகள் கேட்டால், காமராஜரைப் போல் "ஆகட்டும் பார்க்கலாம்" என்பார். ஒரு வழக்கறிஞருக்கு தேவையான முக்கிய குணங்கள் அவரிடமிருந்தது. தனக்கு வாடிக்கையாளரால் தரப்பட்ட தகவல்களை அலசி ஆராயும் தன்மையுள்ளவர். வாடிக்கையாளர் உண்மை பேசுகிறாரா என்று அறிவதற்கு அவர் பல கோணங்களில் பல கேள்விகளைக் கேட்பார். தனித்தன்மை வாயந்த சூல்நிலையில் அதற்குப் பொருத்தமான தீர்வுகளைப் படைக்கும் ஆற்றல் உள்ளவர். ஒரு வழக்கில் வாடிக்கையாளர் தந்த தகவல்களை வைத்து திறமையாக ஆராய்ச்சி செய்யும் குணம் அவரிடமுண்டு. அவர் தன்னோடு தொழில் புரிவோருடன் இனிமையாகப் பேசி தனக்குத் தேவையானதை பெறக்கூடிய சாமர்த்தியம் அவரிடம் உண்டு. மிக முக்கியமாக வழக்கை வாதாட ஏற்க முன், தனிடம் வந்திருப்பவர் செய்த குற்றத்தில் இருந்து தப்பிக்க சட்டத்தில் இடம் இருகிறதா என்று தீர்மானித்த பின்னரே அவர் வழக்கை ஏற்றுக் கொள்வார். விடாமுயற்சி தன்மையை அவரிடம் காணலாம். தனக்கு கிடைத்த தகவல்களின அடிப்படையில் தர்க்க ரீதியாக சிந்திக்கக் கூடியவர். பேச்சு வன்மையுள்ளவர்,

அரசியல்வாதிகளைப் போல் அல்லாது, தனக்கு எதிராக வாதாடும் வழக்கறிஞரை விவாதத்தில் இலகுவில் மடக்கக் கூடியவர். அவரது முகபாவனை அந்தந்த நிலைக்கு ஏற்ப மாறும். கேள்விகள் கேட்கும் போது அவரது கண்களும் கைகளும் பேசும். உண்மையைக் மறைக்க வைத்துவிடுவார். அவர் தன் கண்களை அகல விரித்து பார்க்கும் பார்வை ஒன்றேபோதும். கடிதங்கள் எழுதுவதோ. அறிக்கைகளை சமர்பிப்பதிலோ கை தேர்ந்தவர். சட்டம் மாறிக் கொண்டிருப்பதால் தொடர்ந்து சட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை நன்கு அறிந்துவைத்திருப்பார்.

அவரது மணவாழ்க்கை மிகிழச்சிகரமானது. அவருக்கு வாரிசுக்கு ராஜகுமரன் (குமார்) என்ற ஒரு மகன் மட்டுமே. வரதராஜாவின் தந்தை முத்துராஜா கொலை வழக்குகளில ஆஜராகி பிரசித்தம் பெற்றவர். தந்தை வழியையே வரதனும் கடைப்பிடித்தார். விடிந்தால் பொழுதறிய சட்டத்தைப் பற்றியே சிந்தனையும் பேச்சும். .

மனைவி சுபத்திரா பொறுமையுள்ளவள். விஞ்ஞானப் பட்டதாரி. படித்தவள் என்ற பெருமை அவளுக்குத துளியளவுக்கும் இல்லை. மகன் குமார் மேல் அளவற்ற பற்றுள்ளவள். கணவனின் மனம் கோணாமல் நடப்பவள். சுபத்திரா வரதனின் சொல்லை மீறி நடப்பது கிடையாது. இதனால் கணவன் மனைவி உறவில் பிரச்சனைகள் தோன்றுவதில்லை. ஆனால் கொலை கற்பழிப்பு வழக்குகளை கணவன் கையாளுவது சுபத்திராவுக்கு சிறிதளவும் விருப்பமில்லை. குற்றம் புரிந்தவன் என்று தெரிந்திருந்தும் ஏன் பணத்துக்கும் புகழுக்கும் ஒருவனை தண்டனையில் இருந்து காப்பாற்றி கர்மாவை சேகரிக்கவேண்டும் என்பது அவள்

கருத்து. நிரபராதி ஒருவனை காப்பாற்றுவதில் அவளுக்கு ஆட்சேபனை இல்லை.

முடிந்தமட்டும், எவ்வளவுக்கு வக்கீல் கட்டணம் அதிகம் வாங்க முடியுமோ அவ்வளவுக்கு பெரும் தொகையான பணம் வாங்கி விடுவார் வரதன் . அப்படி சம்பாதித்து இங்கையியிலும், மலேசியாவிலும் வாங்கிய தென்னம் தோடங்களும் , தேயிலை தோடங்களும் . கொழும்பில் விலை உயரந்த பகுதியான கறுவாக் காட்டில் இரு வீடுகளும், யாழ்ப்பாணத்துக்கு அருகே உள்ள மானிப்பாயில் இரண்டு ஏக்கரில் ஒரு பெரிய பங்களாவும் அவரின் வளர்ந்து கொண்டு இருக்கும் சொத்துக்களின் எண்ணிக்கை. கர்மாவோடு சேர்த்த சொத்தும் வளர்கிறது என்று ஊர்சனங்கள் பேசியது அவரின் காதில் விழாமல் இல்லை குற்றவியல் கேஸ்களில் வென்ற முதன்மையான வழக்கறிஞர் என்ற பெயரை நிலை நாட்டவே வழக்கறிஞர் வரதராஜா விரும்பினார், தன் மகன் குமரன் தன்னைப் போல் குற்றவியல் துறையில் பிரசித்தம் பேற வேண்டும் என்பது அவரின் கனவு.

***

நீர்கொழும்பில் பிரபல சண்டியன் என்று பெயர் வாங்கிய பெர்ணாந்து பிள்ளைக்கு என ஒரு மாபியா கூட்டம் இருந்தது. கொள்ளை, அரசியல் கொலைகள் கற்பழிப்பு போதை மருந்து, விபச்சார வியாபாரம் பெர்ணாந்து பிள்ளக்கு அத்துப்படி. 6 ஆம் புவனேகபாகுவின் வளர்ப்பு மகனும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி 17 வருடங்கள் ஆட்சி செய்த கேரளா பணிக்கர் சாதியைச் சேர்ந்த சபுமல் குமாரயா பரம்பரையை சேர்ந்தது தன் பூர்வீகம் என்று அடிக்கடி சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வான் பெர்ணாந்து பிள்ளை . போர்த்துக்கேயர் வருகையின் பின் பல சலுகைகளுக்காக அவனின் பூட்டனார் சில்வாப் பிள்ளை மதம்

மாறியதால் கத்தோலிக போர்த்துக்கேய பெயர் ஒட்டிக் கொண்டது அரசியல்வாதிகளின் கைக்கூலியாக இயங்குவது நீர்கொழும்பு சண்டியன் பிள்ளையின் முக்கிய பிழைப்பு. அதனால் அரசியல்வாதிகளோடு நெருங்கிய தொடர்பு இருந்தது

மருதானை சண்டியனும் பிள்ளையின் மைத்துனுமான அன்டன் சொயிசாவை கொலை செய்த விசயமாக. அன்று வழக்கறிஞர் வரதராஜாவை சதித்து பேச வந்திருந்தான் பெர்ணாந்து பிள்ளை.

பிள்ளையின் சகோதரி பெலோமினா தமையனின் அனுமதியை மீறி காதலித்து திருமணம் செய்தது பிள்ளையின் ஒரு காலத்தில் அன்புக்கும் நம்பிக்கைகும் பாத்திரமான உதவியாளனாக இருந்தவன் மருதானையை சேர்ந்த சிங்களவனான அன்டன் சொயிசா. . காலப் போக்கில் பிள்ளையோடு கருத்து வேறுபாட்டினாலும் கொள்ளை அடித்த பணப் பங்கீட்டில் ஏற்பட்ட பிரச்சனையாளும் , பிள்ளையின் சகோதரி பிலோமினாவை பிள்ளையின் அனுமதியின்றி காதலித்து களவாகத் திருமணம் செய்து , பிள்ளையின் மாபியா கூட்டத்தில் இருந்த இருவரோடு பிரிந்து, தனியாகப் போய் தனக்கென ஒரு காடையர் கூட்டம் சொய்சா மருதானையில் அமைத்தான் அவனுக்கு உதவியாக அவனின் மகன் நுவான் சொயிசாவும் இருந்தான் .

இரு காடையர் கூட்டங்களுக்கு இடையே பல தடவை துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் நடந்தன அனால் உயிர் இழப்புகள் இடம் பெறவில்லை .

ஒரு கிழமைக்குமுன் கொழும்பில் இருந்து புத்தளம் போகும் பாதையில் நீர்கொழும்பில் இருந்து 10 கி மீ தூரத்தில் உள்ள கொச்சிக்கடை என்ற இடத்தில் நடந்த துப்பாக்கிசசூட்டு சம்பவத்தில் அன்டன் சொய்சா இறந்தான். அந்த சம்பவத்தின் போது பெர்ணாந்து பிள்ளையோடு அவனின் கூட்டதை சேர்ந்த ரணவீர இருந்தான் ஆனால் அன்டன் சொய்சாவை ரிவோல்வரால் சுட்டு கொலை செய்தது பிள்ளயெனவும் அவனுக்கும் சொய்சாவுக்கும் தொழில் ரீதியாக விரோதம் இருந்ததிற்கு ஆதாரம் இருந்ததாலும் அவன் பிள்ளையின் சகோதரியை மைத்துனனின் விருப்பத்துக்கு எதிராக திருமணம் செய்ததினால் அந்த கோபத்தினால் கொலை செய்தான் என்று தன்னை போலீஸ் கைது செய்ய போகிறது என அறிந்து பிள்ளை வழக்கறிஞர் வரதராஜாவின் உதவியை நாடி வந்தான்.

அன்டன் சொய்சாவை ரிவோல்வரால் சுட்டுக் கொலை செய்தது தாஎன்று வரதராஜா ஒப்புக் கொண்டு சட்டத்தில் இருந்து தன்னையும் தன்னோடு இருந்த தன் சகா ரணவீரவையும் காப்பாற்றினால் எவ்வளவு பணம்வேண்டுமானாலும் தான் தருவதாக உதவி கேட்டு வழக்கறிஞர் வரதராஜாவை பிள்ளையை சந்திக்க வந்திருந்தான்.

வழக்கறிஞர் வரதராஜா. பிள்ளையை இரு வழக்குகளில் இருந்து ஏற்றகனவே காப்பாற்றி இருக்கிறார் . இந்த வழக்கு முற்றிலும் மாறுபட்ட கொலை வழக்கு.

"அதை சரி பிள்ளை நான் இந்த வழக்கை நடத்த முன் உன்னிடம் சில கேள்விகள் நான் கேட்க வேண்டும் வைத்தியரிடமும் வக்கீலிடமும் உண்மை பேசவேண்டும் என்று சொல்வார்கள் அது உனக்குத் தெரியும் தானே "

“தெரியும் ஐயா. நீங்கள் இரு தடவை  என்னை காப்பாற்றியதை நான் மறக்க மாட்டேன்”

“நீ உண்மையில் உன் மைத்துனன் அன்டன் சொயிசாவை கொலை செய்தாயா”?

” அவனை நான் தான் சுட்டேன். நான் சுடும்போது என்னோடு என் சகா ரணவீரவும் இருந்தான்

“ ஏன் சுட்டாய் “ ?

“சொயிசாவின்  பகுதி மருதானை,  அவன் என் நீர்கொழும்பு பகுதிக்குள் வந்து எனக்குத் தெரிந்த ஹனிபா முதலாளி  ஒருவரிடம் கப்பம் கேட்டான். அந்த முதலாளி எனக்கு மிகவும் வேண்டியர் . அவர் எனக்கு முறைப்பாடு இட்டார். அதோடு சொயிசா என் கூட்டத்தில் இருந்து பணம் திருடிக் கொண்டு, எனது சகோதரியை கடத்திக் கொண்டு போய் விட்டான். அது எனக்கு பெரும் அவமானம்”

“உன் சகோதரி அவனைக் காதலித்ததால் அவன் அவளைக  கூட்டிப் போனதாகக் கேள்விபட்டேனே”

“அவள் அவனை காதலித்து இருந்தால் அவனோடு போக முன்  என் சம்மதம் பெற்றிருக்கவேண்டும். அது நடக்கவில்லை ஐயா “

“உனக்குத் தெரியுமா கொலை செய்ததுக்கு சட்டதில்ல் தண்டனை என்ன வென்று ?. அதோடு நீர்கொழும்பு நீதிமன்ற நீதிபதி  மிகவும் கண்டிப்பானவர். ”

“தெரியும் ஐயா. மரணதண்டனை “.

“நீ கொலை செய்ய பாவித்த ரிவோல்வர் எங்கே”

:” இதோ கொண்டு வந்திருக்கிறேன் ஐயா” ,

தன் சிறு தோல் பையில் கொண்டு வந்த ரிவோல்வரை வரதராஜாவிடம் பிள்ளை. கொடுத்தான்

அதை வாங்கியபடி “நீ எனக்கு இந்த ரிவோல்வரை தந்தாக ஒருவருக்கும் சொல்லவேண்டாம். : எத்தனை தடவை சுட்டாய்”?

“இரு தடவை. சுட்டேன் ஐயா. மிகுதி நான்கு சன்னங்கள் இந்த ரிவோல்வருக்குள் இருக்கிறது ஐயா “

“ அப்போ போலீஸ் சம்பவம் நடந்த இடத்தில கண்டெடுத்தது யாருடைய ரிவோல்வர்?

அது வித்தியாசமான சன்னம் பாவிக்கும் ரிவோளல்வர். என்னோடு இருந்த என் கூட்டாளி ரணவீர. நான் சொன்னபடி தன் ரிவோல்வரை நான்கு சன்னங்களோடு சம்பவம் நடந்த இடத்தில எறிந்து விட்டு என்னோடு வந்து விட்டான். அதை தான் போலீஸ் சொயிசவை கொலை செய்ய நான் பாவித்த ரிவோல்வ என்று போலீஸ் கண்டெடுத்தது . அதில் என் கைரேகைகள் இல்லை “

” நீ புத்திசாலியாக நடந்திருகிறாய். உனது வழக்கை நான் எடுத்து இருவருக்கும் நடத்துறன். எவ்வளவு பணம் செலவானாலும் சரியா”?

“அதை பற்றி கவலை வேண்டாம் ஐயா .அந்த ஹனிபா முதலாளியும் நானும் தருவோம் “

நல்லது. முதல் பணமாக 50,000 ரூபாயுக்கு செக் தரவேண்டும் சரி. மிகுதி பணம்150,000 ரூபாய் வழக்கு உங்கள் இருவருக்கும் சாதகமாக முடிந்த பின் தந்தால் சரி

****

அன்டன் சொயிசா கொலை வழக்கு பிரேத பரிசோதனை, போலீஸ் விசாரணைகளுக்குப் பின் கொலை நடந்து நான்கு மாதங்களில்

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முதலாம் குற்றவாளியாக பெர்ணாந்து பிள்ளையும் இரண்டாம் குற்றவாளியாக ரணதீராவும் அன்டன் சொயிசாவை ரிவோல்வரால் சுட்டு கொலை செய்ததாக இருவர் மீது வழக்கு தொடரப்பட்டது . சம்பவம் நடந்த இடத்தில இருந்த நால்வர் சாட்சி சொன்னார்கள். அதில் இருவர் முதலாம் குற்றவாளியின் கையில் ரிவோல்வர் இருந்ததைக் கண்டதாயும். அதோடு இரண்டாம் குற்றவாளியின் கைகளில் ரிவோல்வர் இருந்ததை தாம் காணவில்லை என்றும் ஆனால் சொயிசா சூடு பட்டு இறக்கதமுன் இரண்டாம் குற்றவாளியும் இறந்தவரும் அடிபட்டு சண்டை போட்டதாக சாட்சிகள் சொன்னார்கள். குற்றவாளிகள் இருவருக்கும். வழக்கறிஞர் வரதராஜா ஆஜரானார் . போலீஸ் இன்ஸ்பெக்டரை குறுக்கு விசாரணை செய்தார்

“: நீர் தானே கொலை நடந்த இடத்துக்கு உடனே சென்ற போலீஸ் இன்ஸ்பெச்டோர்”? .

”ஆம்”

“அப்போது இரு குற்ற்வளிகளும் அங்கு இருந்தார்களா ”.?

“ இல்லை. சொயிசா இரத்த வேளத்தில் கீழே கிடந்தார் ”

“ அப்போது அவருக்கு உயர் இருந்ததா ‘?

:” இல்லை”

:” கொலை நடந்த போது அந்த இடத்தில எத்தனை பேர் நின்றனர்”?

“சாட்சி சொன்னவர்கள் நால்வர்.”

“ அவர்கள் எதைக் கண்டார்கள் “?

“ முதலாம் குற்றவாளியின் கையில் ரிவோல்வர் இருப்பதை அவர்கள் கண்டார்களா “?

“ இல்லை”

: அப்போ நீர் கண்டெடுத்த ரிவோல்வர் முதலாம் குற்றவாளியின் ரிவோல்வர் என்று நிட்சயமாக சொல்ல முடியுமா.”?

“ ஆம் முடியும்”

“ அனால் பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலில் கண்டெடுத்த இரு சன்னகள் நீர் கண்டெடுத்த முதலாம் குற்றவாளியின் ரிவோல்வருக்குள் பொருந்தாதே . அதைப் பற்றி என்ன சொல்லுகிறீர்”:

இன்ஸ்பெக்டரிடம் இருந்து பதில் இல்லை

நீர் கண்டெடுத்த ரிவோல்வரில் இரண்டு குற்றவாளிகளின் கைரேகைகள் இருந்ததா” ?

“ இருக்கவில்லை”

:”அப்போ எப்படி இரு குற்றவாளிகளில் ஒருவர் இறந்தவரை சுட்டு கொலை செய்து இருக்க முடியும்? . ஒரு வேளை இறந்தவரின் வேறு ஒரு எதிரி மறைவில் இருந்து சம்பவம் நடந்த இடத்தில உள்ள தேனீர் கடையில் இருந்து சுட்டிருக்கலாம் அல்லவா:”?

“ இருக்கலாம்”:

“உண்மை பேசினத்துக்கு நன்றி. இதில் இருந்து தெரியவருகிறது இரு குற்றவாளிகளை ஒருவராவது இறந்தவரை சுடவில்லை. ஆனால் இறந்தவர் இரண்டாம் குற்றவாளியை முதலில் அடித்ததால் அவர் தற்பாதுகாப்புக்காக திருப்பி அடித்திருகலாம் அல்லவா . இதற்கு நீர் என்ன சொல்லுகிறீர் “”

“ இருக்கலாம்”

“நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னதுகு நன்றி இன்ஸ்பெக்டர் ?::வரதராஜ சொன்னார்

எழு ஜூரிகள் அரசு தரப்பினதும் பிரதி வாத வழக்கரிஞ்சரின் வாதங்களை கேட்டு இரு குறற்வாளிக்ளும் சுட்டு கொலை செய்ததுக்கு போதிய ஆதரமில்லை என்பதால் குற்றவாளிகள் இருவரும் குற்றமற்றவர்கள் என நீதிபதிக்கு ஏக மனதாக பரிந்துரைத்தரர்கள். நீதிபதி இருவரையும் விடுதலை செய்து வரதராஜாவின் வாதத்தைப் பாரட்டினார். பொலீஸ் சரிவர விசாரணை செய்து இருக்க வேண்டும் என்று எச்சரித்தார்.

****

சில வருடங்களுக்குப் பின் வரதராஜா ஒய்வுபெற்று ஆன்மீக வாதியானார் . அவர் தன தொழிலை தன் மகன் ராஜ குமரனிடம் கையளித்தார். . ராஜகுமாரனுக்கு அரசியலில் ஈடுபாடு இருந்ததால் ஆ எதிரிகள்ள பலர். ஒரு நாள் நீதி மன்றத்துக்கு போகும் வழியில் ஒருஅரசியல் தொடர்புள்ள மாபியா குழுவினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.. வரதராஜா வாதாடி வென்ற சொயிசா கொலை வழக்கில் இறந்த அன்டன் சொயிசாவின் மகன் ருவான் சொயிசா அந்தக் கொலையைப் பலிவாங்கும் நோக்கத்தோடு செய்தாலும் போதிய ஆதாமில்லாததால் விடுதலை செய்யப்பட்டான் .

பெர்ணாந்து பிள்ளை தீவிர குடல் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு மஹரகம புற்று நோய் ஆஸ்பத்திரில்அனுமதிக்கப்டான். அவனுக்கு இன்னும் ஒரு மாத வாழ்க்கை என டாக்டர்கள் அவனின் குடுமபத்துக்கு சொல்லி விட்டார்கள் . பிள்ளையின் கூட்டாளி

ரணவீர் ஒரு கார் விபத்தில் மரணமடைந்தான் , வரதராஜா முடக்கு வாதத்தால் ஒரு அறையில் அசையாது இருந்தார்  இவை யாவும் தொடர்ந்து நடந்தன .

கர்மாவின் பிரதிபலிப்பு .

*****

(யாவும் புனைவு)